# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2081/44 - 2018 ජූලි මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.07.26

*2081/44 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 24/51* (iv)

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

*(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 128அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 237 ஆம் பிரிவின்கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

நிமல் சிரிபால டி சில்வா,
போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2018, யூலை 24.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் மோட்டார் வாகன (பொதுச் சேவை மோட்டார் முச்சக்கர வண்டி) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வந்தபின்னர், மோட்டார் முச்சக்கரவண்டிக்குச் செல்லுபடியான சாரதி உரிமத்தைப் பெற்றுக்கொள்கின்றவரும் கட்டணத்துக்காக அல்லது வெகுமதிக்காகப் பயணிகளை ஏற்றிச்செல்வதற்கு அத்தகைய மோட்டார் முச்சக்கரவண்டியை பயன்படுத்துகின்றவரும் அல்லது பயன்படுத்தப்படுவதற்கு இசைவாக்குகின்றவரும் அல்லது வைத்திருப்பவருமான (இதனகத்துப் பின்னர் ''இவ்வொழுங்கு விதிகள் ஏற்புடையனவாகும் ஆள்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒவ்வோர் ஆளுக்கும் இவ்வொழுங்கு விதிகள் ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்.

3. இவ்வொழுங்குவிதிகள் எவ்வாளுக்கு ஏற்புடையனவாகின்றனவோ அவ்வாள் எவரும், (இதனகத்துப் பின்னர் ''ஆணையாளர் தலைமையதிபதி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதியினால் அதற்கெனப் புறக்குறிப்பிடப்பட்ட உரிமத்தின் மீதான விசேட புறக்குறிப்பின் கீழ் தவிர பொதுச்சேவை மோட்டார் முச்சக்கர வண்டியொன்றைச் செலுத்துதலாகாது.


1A-PG 4142 — 507 (2018/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. மூன்றாம் ஒழுங்குவிதியின் கீழ் புறக்குறிப்பொன்றுக்காக விண்ணப்பிப்பதற்கு விரும்புகின்ற ஆள் ஒவ்வொருவரும்-

(அ) முப்பத்தைந்து வயதுக்குக் குறையாதவராகவும் எழுபது வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) மோட்டார் முச்சக்கர வண்டிக்கான சாரதி உரிமத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் ஆகக்குறைந்தது இரண்டாண்டுகளைக் கொண்ட காலப்பகுதிக்கேனும் செலுத்துதல் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. 3 ஆம் கட்டளையின் கீழ் புறக்குறிப்பொன்றுக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் பொருளளவில் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், பின்வருவனவற்றுடன் சேர்த்து அனுப்பப்படுதலும் வேண்டும் :-

(அ) தேசியப் போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தினால் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட மருத்துவச் சான்றிதழொன்று ;

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதியினால் திட்டமிடப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு நடாத்தப்பட்ட பயிற்சிநெறியொன்றின் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் நடாத்தப்பட்ட அத்தகைய பயிற்சிநெறியின் சான்றிதழொன்று ;

(இ) விண்ணப்பகாரர் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட குற்றமிழைப்பவர் ஒருவர் அல்ல என உறுதிப்படுத்துகின்ற பொலிஸ் அறிக்கையொன்று ; அத்துடன்

(ஈ) இரண்டாயிரம் ரூபாவான கட்டணமொன்று.

6. இவ்வொழுங்கு விதிகள் எவ்வாளுக்கு ஏற்புடையனவாகின்றனவோ அவ்வாள் (22 ஆம் அத்தியாயமான) குற்றச் செயல்களைத் தடுத்தல் கட்டளைச் சட்டத்தின்கீழ் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட குற்றமிழைப்பவர் ஒருவர் எனப் பதிவுசெய்யப்பட்டிருப்பின், பொதுச்சேவை மோட்டார் முச்சக்கர வண்டியொன்றின் சாரதியொருவராக இருப்பதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும் :-

(அ) ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்றதும் ஆறு மாதங்களைக் கொண்ட காலத்துக்கான மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதுமான தவறொன்றுக்கு அவர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டால் ; அல்லது

(ஆ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஒரு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பை அவர் அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்.

7. இவ்வொழுங்கு விதியில் :-

"மோட்டார் முச்சக்கர வண்டி" என்பது, (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன்

"பொதுச் சேவை மோட்டார் முச்சக்கர வண்டி" என்பது, ஒரு கட்டணத்துக்காக அல்லது வெகுமதிக்காகப் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்துவதற்கு இசைவாக்கப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட ஏதேனும் மோட்டார் முச்சக்கர வண்டி என்று பொருளாகும்.

## அட்டவணை

*(ஒழுங்குவிதி 5)*

பொதுச்சேவை மோட்டார் முச்சக்கர வண்டியைச் செலுத்துவதற்கு ஒரு விசேட புறக்குறிப்புக்கான விண்ணப்பம்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :............................................................................
2. முழுப்பெயர் :............................................................................
3. முகவரி :............................................................................
4. மாவட்டம் :............................................................................
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :............................................................................
6. பிறந்த திகதி :............................................................................
7. ஆண்/பெண் :............................................................................
8. தான் புரிந்த தொழில் :............................................................................
9. எந்த வகுப்பினதான அல்லது வகுப்பினவான வாகனங்களுக்கு உரிமம் செல்லுபடியாகவுள்ளதோ அந்த வகுப்பினதான அல்லது வகுப்பினவான வாகனங்கள் :............................................................................
10. சாரதி உரிமத்தின் விபரங்கள் :

    (அ) சாரதி உரிம இல. :............................................................................
    (ஆ) வழங்கிய திகதி :............................................................................
    (இ) முடிவுறும் திகதி :............................................................................
    (ஈ) திறமையீனப் புள்ளிகள் எவையேனுமிருப்பின் அவை :............................................................................

கையொப்பம் :

திகதி :

08-423

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.